# பத்திரிக்கை செய்தி

அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக செயல்படும் தொட்டில் குழந்தை திட்டத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிப்புரிய தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்களின் வயது வரம்பு 42 வயதிற்குள் இருத்தல் வேண்டும். மேலும் குழந்தைகளை கையாளுதலில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | கல்வி தகுதி | மாதாந்திர தொகுப்பூதியம் |
|---|---|---|---|
| 1. | காப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் | 12ம் வகுப்பு | ரூ.7500/- |
| 2. | உதவியாளர் (பெண் மட்டும்) | 8ம் வகுப்பு | ரூ.4500/- |
| 3. | காவலர் | 8ம் வகுப்பு | ரூ.4500/- |

விண்ணப்பத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை கல்வி தகுதி மற்றும் முன் அனுபவ சான்று ஆகியவைகளை இணைப்புகளுடன் 31.12.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் – 621704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
அரியலூர்.

2/2

11.12.24